NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 5 September 2022

# வீட்டில் உதவும் பிள்ளைகளால் மூதாட்டிகளுக்கு தொல்லை

வீட்டுவேலையில் கூடுதல் உதவி கிடைப்பது மூதாட்டிகளுக்குப் பாதகமாக இருக்கக்கூடும் என்று கிட்டத்தட்ட 3,000 முதியவர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வு கூறியுள்ளது.

குறிப்பாக தங்கள் பிள்ளைகளில் கூடுதலானோர் வீட்டுவேலையில் உதவி செய்யும்போது மூதாட்டிகளின் வாழ்க்கைத் தரம் குறையக்கூடும் என்று ஆய்வு கூறியது.

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சமூகவியல் துறை இணைப் பேராசிரியர் ஷேனன் ஆங், டியூக்-என்யுஎஸ் மருத்துவக் கல்லூரியின் மூப்படைதல் குறித்த ஆய்வு, கல்வி நிலையத்தின் டாக்டர் ராகுல் மல்ஹோத்ரா இருவரும் இந்த ஆய்வை மேற்கொண்டனர்.

மூதாட்டிகளில் பலரும் இல்லத்தரசிகளாக இருந்திருக்கலாம். அதனால் அதிகமான பிள்ளைகள் வீட்டுவேலைகளில் உதவும்போது தங்களுக்கான இடத்தில் அதிகாரத்தை இழந்துவிட்டதாக மூதாட்டிகளுக்குத் தோன்றக்கூடும் என்று ஆய்வாளர்கள் கூறினர்.

மேலும், பிள்ளைகள் சொல்பேச்சு கேட்காமல் தங்கள் பாணியிலேயே வீட்டு வேலைகளைச் செய்வது அம்மாக்களுக்கு பிடிக்காமல் போகலாம். தங்கள் வாழ்க்கை மீதான அதிகாரத்தை இழந்துவிட்டோம் என்ற எண்ணம் ஏற்பட்டு மூதாட்டிகளின் வாழ்க்கைத் தரம் குறையலாம் என்று ஆய்வு கூறியது.

பிள்ளைகளின் உதவி பெற்றோரின் வாழ்க்கைத் தரம் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை ஆராய்ந்த முதல் சிங்கப்பூர் ஆய்வு இதுவாகும்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.